# சக்தி

பிப்ரவரி 2008
விலை ரூ. 10

ஆசிரியர் - நா. மகாலிங்கம்



அமர்ந்த கோலத்தில் அர்த்தநாரீஸ்வரர்

# தண்ணீரை மட்டும் தந்தால் போதும்...



நா. மகாலிங்கம்

புது தில்லியில் 19.12.2007 அன்று நடைபெற்ற 54–வது தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பேசுகையில், **நதி நீர்ப் பிரச்னைக்கு உரிய காலத்தில் தீர்வு காணாவிட்டால், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அது பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடும்"** என்று அவர் கூறிய கருத்து தேச ஒற்றுமையில் நாட்டமுள்ள அனைவரும் சிந்திப்பதற்கு உரிய கருத்தாகும்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை அதிகரிக்க கேரள அரசு மறுக்கிறது. பாலாற்றில் தடுப்பணை கட்ட ஆந்திர அரசு திட்டம் வகுக்கிறது. காவிரியிலிருந்து தமிழகத்திற்கு உரிய தண்ணீர் தருவதில் கர்நாடக அரசு காலதாமதத்தை மேற்கொள்கிறது.

இச்சிக்கல்களிலிருந்து விடுபட ஒரே தீர்வு நதி நீர் இணைப்புத்தான்.

தேசியத் திட்டக் குழு ரூ. 36 லட்சம் கோடியில் தயாரித்துள்ள 2007–12–க்கான 11–வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை சென்ற டிசம்பர் மாதம் ஒப்புதல் அளித்து விட்டது.

இதையடுத்து, இத்திட்டம் தேசிய வளர்ச்சிக் கவுன்சிலின் ஒப்புதலுக்காக முன்வைக்கப்பட்டபோதுதான், தமிழக முதல்வர் நதிகள் இணைப்பையும் நாட்டின் ஒற்றுமையையும் தார்மீக நோக்கில் இணைத்துக் காட்டிப் பேசியுள்ளார்,



உச்ச நீதிமன்றம்

இந்தியாவில் உள்ள நதிகளை இமாலய நதிகள், மத்திய இந்திய நதிகள், தென்னிந்திய நதிகள் என மூன்று வகையாகப் பார்க்கலாம். இமாலய நதிகளை 2043–ஆம் ஆண்டிற்குள்ளும் மத்திய நதிகளை 2035–ம் ஆண்டிற்குள்ளும் இணைக்கலாம் என்று மத்திய அரசு, தென்னக நதிகள் பற்றி எதுவும் பேசவில்லை.

இமாலயப் பகுதி நதிகளை இணைப்பது சர்வதேச அளவிலான நடவடிக்கை என்பதால், தேசிய நதிகளை இணைக்கும் திட்டத்தைப் பற்றியே முதலில் சிந்திக்கப்பட்டது. இதற்கான காலம் 40 ஆண்டுகள் என்பதாகவும், செலவு ரூ. 4 லட்சத்து 44 ஆயிரம் கோடி என்றுமாகவும்

Registered with Register of Newspapers for India No. 42582/93
Licensed to post without pre-payment under Regn. TN / WR / CBE / 59 / WPP / 2006 - 2008
Date of Publication
Every Month 28th & 29th
Regd. No. TN / WR / CBE / 58 / 2006 - 2008
OM SAKTHI - FEBRUARY 2008



சக்தி பைனான்ஸ் லிமிடெட்

சக்தி குழுமத்தின் ஓர் அங்கம்

475, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர் - 641 018